[1994 மார்ச் 19

திரு. காஞ்சி பன்னீர்செல்வம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, நிலக்கரியை வெட்டி எடுக்கின்ற உரிமம் மத்திய அரசுக்கு மட்டும்தான் உண்டு என்று இது வரையிலே நான் கேள்விப்பட்டிருக்கின்றேன். அந்த உரிமம் நம்முடைய இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவியினுடைய தமிழக அரசுக்கும் உண்டா என்பதை மாண்புமிகு அமைச்சரவர்கள் தெரிவிப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, உறுப்பினர் சொன்னதைப் போல சுரங்கத் துறை மூலம் எடுக்கிற கனிம வளத்திற்கு அனுமதி கொடுக்கின்ற உரிமை மத்திய அரசில் தான் இது வரைக்கும் இருந்து வந்தது. அந்த உரிமை மாநில அரசுக்கும் வேண்டுமென்று போராடிப் பெற்ற முதல் முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள் மத்திய அரசிடம் போராடிய காரணத்தால்தான், திருச்சிராப்பள்ளி மாவட்டம் ஜெயங்கொண்ட சோழபுரத்தில் இருக்கிற பழுப்பு நிலக்கரியை மாநில அரசு எடுப்பதற்கு மத்திய அரசு அனுமதி வழங்கியுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண் 51, திரு. வி. ரவிச்சந்திரன், மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர்.

51—

பச்சமலை, வண்ணாடு, தண்ணீர் பள்ளம் கிராமத்தில் சத்துணவு மையம் அமைத்தல்.

*22059—திரு. வி. ரவிச்சந்திரன் :

மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பச்சமலை, வண்ணாடு, தண்ணீர் பள்ளம் கிராமத்தில் சத்துணவு மையம் அமைத்துத்தர அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ஆரம்பிக்கப்படும் ?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூகநலத் துறை அமைச்சர்:

1994 மார்ச் 19]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே,

(அ) மற்றும் (ஆ): இந்தக்கேள்வி கேட்கப்படும் பொழுது அங்கு சத்துணவு மையம் இல்லை. ஆனால், கேள்வி வருகிற பொழுது மாண்புமிகு முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய உத்தரவின் பேரில் புதிய சத்துணவு மையம் துவக்கப்பட்டதோடு அதற்குப் புதிய கட்டிடம் வழங்கப்பட்டு விட்டது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

திரு. வி. ரவிச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உலக நாடுகளும், மற்றும் யுனிசெப் போன்ற உலக நிறுவனங்களும், உலக சமூக சேவகர் அன்னை தெரசா அவர்களும் பாராட்டுகின்ற வகையில் சமூக நலத் துறையில் பல்வேறு சாதனைகள், உலக நாடுகளுக்கு எடுத்துக் காட்டாகச் செய்து கொண்டிருக்கும் எங்களின் அன்புத் தாய் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அரசு பச்சமலை, வண்ணாடு, தண்ணீர் பள்ளம் கிராமத்தில் சத்துணவு மையம் அமைக்க வேண்டுமென்ற வினாவைக் கேட்டவுடனே அதன்மீது நடவடிக்கை எடுத்து சத்துணவு மையம் அமைத்துக் கொடுத்தற்காக என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 52 திரு. கு. சீனிவாசன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

52 —

மன்னார்குடி தொகுதி பாலையூர் உயர்நிலைப் பள்ளிக்கு புதிய கட்டிடம் கட்டுதல்.

*21037 திரு. கு. சீனிவாசன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மன்னார்குடி தொகுதிப் பாலையூர் உயர்நிலை, பள்ளி கட்டிட வசதியின்றி ஊராட்சி ஒன்றியக் கட்டிடத்தில் இயங்குவதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அப்பள்ளிக்கு புதிய கட்டிடம் எப்போது கட்டப்படும் ?

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே,